| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **59/2018** |
| **DATE** | : | **20.04.2026** |
| **பெயர்** | : | **துலுக்கான்** |
| **தந்தை பெயர்** | : | **ராகவன்** |

**<u>வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1. எனது சொந்த ஊர் கோவிந்தவாடி அகரம். வாதியும் அதே ஊரை சேர்ந்தவர் தான். 2ம் பிரதிவாதி எனது தகப்பனார் ஆவார் அவர் காலமாகிவிட்டார். வாதியும் காலமாகிவிட்டார். 3ம் பிரதிவாதி சுள்ளியம்மாள் எனது தாயார். பிரதிவாதிகள் 4 முதல் 9 எனது சகோதரர் மற்றும் சகோதரிகள். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு என் மீதும் எனது தந்தை மீதும் முதலில் தாக்கல் செய்யப்பட்டது. எனது தந்தை காலமானதற்கு பிறகு மற்ற பிரதிவாதிகள் வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டனர்.

2. எனது வீடு கோவிந்தவாடியில் கீழண்டை தெருவில் உள்ளது. எனது வீட்டின் முன் பக்கம் 16 அடி, பின் பக்கம் 19 அடி. நீளம் சுமார் 103 அடி இருக்கும். தாவா பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் ஜக்குபந்திகள் சரிதானா என்றால் அவர் என்ன தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் விவசாயம் செய்து வருகிறேன். மேலும் டாஸ்மார்க்கில் சேல்ஸ்மேன் வேலையும் பார்க்கிறேன். வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை. வாதி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துவிட்டேன் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். எவ்வளவு அடியை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்று வாதி கோரியுள்ளார் என்றால் தெரியாது.

3. வாதி தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தை நான் பார்க்கவில்லை. எந்த விவரமும் தெரியாமல் எதன் அடிப்படையில் பதில் தாக்கல் செய்துள்ளேன்

என்றால் நான் பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன்.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.